## சமஸ்த லங்கா சாசனாரக்சக சபை நிதியம் - 2016

சமஸ்த லங்கா சாசனாரக்சக சபை நிதியத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று திரண்ட நிதிய மாற்றல் கூற்று மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினது பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டலய சட்டத்தின் 10(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பதில் தாமதத்தின் பேரில் நிதியத்தின் கொடுக்கல் வாங்கல்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2018 பெப்ரவரி 08 ஆந் திகதி சபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது. 2014 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டலய சட்டத்தின் 10(3) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானது என முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கடப்பாடுகள் என்பவற்றிக்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சருவதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) ஒத்ததாக இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வினை மேற்கொள்வதன் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

### 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக ஐந்தொகை, வருமான செலவினக் கணக்கு ஆகியவற்றில் பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்படாத விடயங்கள் அத்துடன் மூலாதாரங்களுக்கு ஏற்புடைய ஏதேனும் செம்மையாக்கல் அவசியமானவையாக காணப்படுகின்றதா என்பதனை நான் நிச்சயிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க, இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

அச்சிடப்பட்ட கொடிகளின் எண்ணிக்கை, விற்பனைக்காக பகிர்ந்தளிக்கப்பட்ட கொடிகளின் எண்ணிக்கை, விற்கப்படாது எஞ்சிய கொடிகளின் எண்ணிக்கை மற்றும் குறித்த எஞ்சிய கொடிகளின் எண்ணிக்கை, அந்த எஞ்சியவை காணப்படும் இடம் அல்லது உறுதிப்படுத்திக் கொள்வதற்கான எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையினால் மொத்த வருமானத்தில் 56 சதவீத அளவிலான ரூபா 9,935,435 ஆன கொடி விற்பனை வருமானத்தை கணக்காய்வின் போது சான்றுறுதிப்படுத்தவோ அல்லது எஞ்சிய இருப்புக்களை மெய்மையாய்வு செய்யவோ முடியாதிருந்தது. ஆதலால் வருமானத்தின் சரியானத்தன்மை தொடர்பாக திருப்தியடைய முடியாதிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் மிகை ரூபா 9,644,078 ஆக இருந்துடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 1,541,720 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 8,102,358 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக கொடி விற்பனை வருமானம் ரூபா 2,046,244 ஆல் குறைவடைந்திருந்த போதிலும் ரூபா 6,000,000 ஆன நன்கொடை தொகை கிடைத்திருந்தமை மற்றும் சிசுசவிய புலமைப் பரிசில் உதவிச் செலவினம் ரூபா 2,050,000 ஆலும் நானாவித செலவினம் ரூபா 1,380,488 ஆலும் குறைவடைந்தமை மேற்படி அதிகரிப்பிற்கு பிரதான காரணங்களாக இருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீஎப்/423 இலக்கமுடைய அரச நிதி சுற்றறிக்கையின் 4.3 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 2 மாதங்களுக்குள் நிதிக்கூற்றுக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 15 ஆந் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.